ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

**बालस्तावत् क्रीडासक्तस्तरुणस्तावत् तरुणीसक्तः ।**
**वृद्धस्तावच्चिन्तामग्नः परे ब्रह्मणि कोपि न सक्तः ॥ ॥१॥**

**बालः तावत्** - சிறுவயதிலிருக்கிறவரையில், **क्रीडासक्तः** - விளையாட்டில் விருப்பமுள்ளவனுகவும், **तरुणः तावत्** - யுவர்வாயிருக்கிறவரையில், **तरुणीसक्तः** - ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவனுகவும், **वृद्धस्तावत्** - அதிக வயதுசென்ற காலத்தில், **चिन्तासक्तः** - மிகவும் கவலேயுடன் கூடினவனுகவுமிருக்கிறுன். **परे** - எல்லாவற்றிற்கும் சிறந்ததாய் விளங்கும், **ब्रह्मणि** - பிர்ம்மத்தினிடத்தில், **कोपि** - ஒருவரும், **न सक्तः** - விருப்பமுள்ளவர்களாக இல்லே.

மானிடப் பிராயம் பெற்றவர்கள் அவசியம் கவனித்தறிய வேண்டிய பரம்பொருளே ஒரு ஸமயத்திலும் கவனியாது, பிறப்பு முதல் இறப்பு வரையில் ஒவ்வொரு ஸமயத்திலும் உபயோகமில்லாத ஒவ்வொரு வஸ்துவில் பற்றுதலேயடைந்து ஜன்மாவைப் பயனற்றதாகச் செய்கிறுர்கள் என்று அறிவிக்கிறுர்.

பொதுவாய் பிராணிகளுக்கு உற்பத்தி காலம் முதல் முடிவு வரையில் மூன்று அவஸ்தைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவையாவன:— பால்யம், யௌவனம், வார்த்தக்கியம் என்பனவாகும் முதலாவதான பால்யாவஸ்தையில் உண்பது, ஓடுவது, நகைப்பது, நடிப்பது தோன்றியபடியெல்லாம் பிதற்றுவது முதலான விளேயாட்டுக்களால் காலத்தைக் கழிக்கின்றனர். அடுத்த யௌவனப் பருவத்தில் காமத்தால் பீடிக்கப்பட்டு எப்பொழுதும் ஸ்திரீகளேயே விரும்பிக்கொண்டு காலம் போக்கப்படுகின்றது. வயது முதிர்ந்த காலத்தில் குடும்ப விஷயமாய் நடக்கவேண்டிய காரியங்களே யுத்தேசித்துச் சொல்லவியலாத பலவித சிந்தைகளுக்காளாகி அவைகளாலேயே அந்த ஜன்மா பூராவும் முடிந்து விடுகின்றது. இவ்விதம் விஷயங்களிலுண்டாகும் அவாவை அடியோடொழித்து வைராக்கியம் பெற்று ஆத்ம ஞானத்திற்குற்ற ஸாதனங்களே கவனிக்கவேண்டியது முக்கியமாகும்.

உபபத்திராதிபர்

ஆர்ய தர்மம்.
க்ஷய-வரு ஆடி-மீ ௧௪-௨

# வேதாந்த ஸித்தாந்தம்.

(மூன் இதழ் ௫௫௨-வது பக்கத்தொடர்ச்சி.)

4. ஜீவனும் பிரமப் பொருளும் ஒன்றென்பதும் "அவனே இச்சாத்தான்" என்றபடி விட்டும் விடாத ஆக்கமென்னும் ஆற்றலால் அவரிடம் தோன்றும் சிற்றறிவு பேரறிவுத் தன்மைகளை விட்டுத்தனியே அறிவின் தன்மையைக்கொண்டு, அவ்விரு பொருளையும் ஒன்றென்றுபதேசிக்கும் பல வசனங்களால் விளங்கும் 'ஆச்மாத்ரியர், ஒளடுலோமி, காசகிருச்சினர்' என்று ஐக்கிய வாதிகளான இம்மூவாசிரியருள் மூன்ருமாசிரியர் ஜீவனென்பதை வேறுபொருளாக ஒவ்வாததால் அதுவே உபநிடதங்களின் உட்கருத்தாம். பந்தகாலத்திலும் ஜீவனென்பது பிர்மத்தினும் வேருயிருக்குமாயின் அத்துவிதம் சித்திக்காதது காண்க. மற்ருென்றுண்டாயின்மக்களுக்குப்பயம்" என்றும், "மாயா மாத்திரையில் துவிதம்; உண்மையிலுள்ளது அத்துவிதம்" என்றும் பற்பல வேத வசனங்கள் காணப்படுதலால், ஜீவனும் பிர்ம வஸ்துவும் ஒன்றென்பது பெறப்பட்டதென்க.

5. மற்றும் "அவனையறிந்தவன் அருள்பெருவான்" என்று தொடங்கிய பல வசனங்களால் பரப்பிரமத்தின் சொரூபவறிவே மோக்ஷத்திற்குக் காரணமென்று ஏற்படுதலால், ஏனைக்கர்மங்கள், யோகங்கள், உபாசனைகள் இவையெல்லாம் மோக்ஷத்திற்கு நேரான சாதனங்களன்ரும். நான்கு வேதங்களின் சித்தாந்த வாக்கியங்களான மகாவாக்கியங்களால் வெளிப்படும் உண்மையறியவே உள்ளதென்பது பெறப்பட்டது. அது தக்க காரணமுள்ளதுமாகுமென்க.

6- பின்னும், வருணுசிரம தருமங்களாக வேதங்களின் கரும காண்டங்களிலே பல சொல்லப்படினும், அக்கருமங்கள்

துவித விஷயங்களானமையானும், தேகமே ஆன்மாவென்னும் பொய்யறிவைப்பற்றுதலானும், அத்துவித நிலையையடைந்த ஒரு மகான்மாவுக்கு நித்தியம் நைமித்திக முதலிய கருமக் கட்டுக் கிடைப்பதேயில்லை. "உண்மையில் பிர்மம் அறியற்பாலது" "உண்மையிற் தருமம் செயற்பாலது" என்று தொடங்கிய பல வாக்கியங்களால் பாஷியகாரர் கருமகாண்ட ஞானகாண்டாதிகாரிகளைத் தனித்தனியே எடுத்துக் காட்டினரென்றறிக. அஞ்ஞான மொழிதற்பொருட்டுக் கருமமும் பரம்பரையில் காரணமாகுமேயன்றி, அதுமாத்திரமேயவித்தையை யொழிக்குங்கருவியாகாது. சூரியன் பிறவொளியை எவ்விதம்வேண்டுதலில்லையோ அங்ஙனம் பிர்ம ஞானம் அவித்தையை யொழித்தற்கு வேறுகருவிகளை ஒருபொழுதுங்கருதாது. ஆதலின், ஞானமும், கருமமும் வேண்டுமென்பது வெளியாயிற்றென்க.

7. மேலும் "எவன் ஒரு தேவதையை அது வேறு; தான் வேறென்றெண்ணி வேற்றுமையுடன் வழிபடுவானோ அவன் பசுவைப் போலுண்மையறியான்." என்று வேதங்களில் நன்றாய் எடுத்து வெளியிடப்பட்டிருக்கின்றமையால் ஒருவன் மற்றொரு தேவதையை வழிபடுங்கால் மனத்தில் அதுதானென்று அபேதத் தோற்றத்துடன் வழிபடவேண்டுமென வெளியாயிற்று. ஒருவன் வழிபடுகிறவனும், மற்றொருவன் தமது வழிபாட்டுக்கிடமாயுள்ளவனென் றெண்ணுவதால் அத்துவிதபத்தி கெடுமல்லவா? வேதாந்தங்களி னெல்லாவற்றிலும் சொல்லப்படும் பரம்பொருளாகிய பரப் பிரமம் கை, கால் முதலிய அவயவங்களற்றது என்பது துணிபு. உலகத்தில் யாம்காணும் அவயவமுள்ள பொருள்களெல்லாம் நாசமுள்ளதாய்க்காணப்படுவதாதலும், 'முடிவுள்ளதும் ஸர்வஞ்ஞத் தன்மையும் பெறாது," என்று சூத்திரகாரர் சொன்னதாலும் என்றறிக. பரம்பொருளாகிய பிர்மம் நம்மைப் போலல்லாது வேறெந்த வழியிலேனும் கை, கால் முதலிய அவயவங்களோடு கூடியிருக்குமேல், அதற்கு ஓர்வித விகாரமுண்டாகுமென்றும், அவயவங்களுள்ள விடத்துத் தோன்றக் கூடிய குற்றங்கள் அனேகமாய்த் தோன்றுமென்றும் பலவித ஆக்ஷேபங்களுக்கிடமாகும். "பிர்மனிருந்திலன், ஈசானனிருந்திலன்" என்று தொடங்கிய பல வேதாந்த வாக்கியங்களால் பரப்பிரமப் பொருள் பிரமா, விட்டுணு, உருத்திரன் இவர்களில் மேலாய துரிய தத்துவமென

வெளியாயிற்று. அது கொண்டு ஆன்ம ஞானம் பெற்றவர்கட்குச் சகுண மூர்த்தியையுபாசிப்பது அவ்வளவு ஆவசியகமற்றதெனச் செய்யும் வாதம் நிலைபெற்றது.

8. மேலும், யோகமென்பது இயமம், நியமம் பிராணயாமம் முதலிய எட்டு அங்கங்களோடு கூடிய தியானமென்னும் ஓர் அங்கத்தில் நிற்பதால், ஜீவனுக்கும் பரமனுக்கும் பாவஸ்துவுக்குமுள்ள வேற்றுமையைப்பற்றி நிற்றலாலும், "யோகம் நிலையுடைத்தன்று" என்று வேதாந்த சூத்திரத்தில் திருவாய் மலர்ந்தருளியதாலும் அவ்விருவகை யோகங்களும் உத்தமர்க்கு உபயோகமற்றன என்பது ஏற்பட்டது. "மனத்தை நிலைநிறுத்துவதே யோகம்" எனவேதாந்தங்களில்வெளிப்படும். வேதம் கருமங்களைப் போல ஓர் வித அதிகாரிகட்குச் சித்த சுத்தியைக் கொடுக்குங் கருவியென்றே வெளியாயிற்று. இதனால் யோக சாஸ்திரமெனப் பெயர் கொண்ட பகவத்கீதை அப்பிரமாணமெனச் சொல்லக் கூடாது. கர்மயோகமென்றும், விபூதியோகமென்றும், தாம் குறிக்க வேண்டிய விஷயமனைத்தையும் யோகமெனவே ஸ்ரீ கண்ணபிரான் குறித்திருப்பதால், அங்கு அவ்வித ஆக்ஷேபம் பொருந்தாவாம். ஜீவனோ முக்காலத்திலும் தத்துவப் பொருளின் வேற்றுமை பெற்றதன்று. ஆதலின் அதனைப் பரப்பிரமத்துடன் சேர்த்தலெங்ஙனம்? இதனால் வேதாந்த சாஸ்திரத்தில் யோக சாஸ்திரம் முற்றிலும் பயன் படாதென்று ஏற்பட்டதென்க.

உபபத்திராதிபர்.

(தொடரும்)

# பக்தி யோகம்.

(௩௪௦-வது பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீ கிருஷ்ணபகவான் உத்தவனுக்கு உபதேசம் செய்யுங்கால் ஏகாதசஸ்கந்த பாகவதத்தில் கூறுவதாவது

यथाग्निः सुसमृद्धार्चिः करोत्येधांसि भस्मसात् ।
तथा मद्विषया भक्तिः उद्धवैनांसि कृत्स्नशः ॥
भक्त्याहमेकया ग्राह्यः श्रद्धयात्मा प्रियः सताम् ।

"உத்தவனே! ஜ்வாலைகளோடுகூடிய அக்னி எவ்வாறு விறகுக் கட்டைகளைச்சாம்பலாகச் செய்கின்றதோ அவ்வாறே என்னிடம் செய்யப்பட்ட பக்தியானது ஸகல பாபங்களையும் எரித்துவிடும்' அதாவது பக்தியைச் செய்தால் அனேக பாபங்களிலிருந்து விடுபட்டு மோக்ஷமடைகிறான் என்பது கருத்து. மேலும் என்னைக் கட்டவேண்டுமாயின் பக்திஎன்ற ஒரே பாசத்தால்தான் முடியும்"

ஸ்ரீ கிருஷ்ணர், பாரதயுத்தத்தின் துவக்கத்தில் அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்வித்தும் மற்றவர்கள் மற்ற உபாயங்களால் பார்க்கமுடியாததான விசுவரூபத்தைக் காட்டியும் இருக்கிறார். அச்சந்தர்ப்பத்தில் அர்ஜுனனிடம் சொல்வதாவது.

**भक्त्यात्वनन्यया शक्यः अहमेवंविधोऽर्जुन ।**

**ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परन्तप ॥**

அர்ஜுனா! இப்பேர்ப்பட்ட (விசுவரூபம் படைத்த) என்னைப்பார்க்க மற்றவர்களிடம் செய்யாத உத்தமபக்தியை என்னிடம்செய்தால்தான் முடியும்.

ஸ்ரீமன் மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில்,

**भक्त्यैव तुष्टिमभ्येति विष्णुर्नान्येन केनचित् ।**

**स एव मुक्तिदाता च भक्तिस्तत्रैव कारणम् ॥**

"பகவான் வேறு எதனாலும் ஸந்தோஷமடையமாட்டார். பக்தியினால்தான் திருப்தியடைகிறார். அவர் திருப்தியடைவதால் நமக்கு என்னப் பிரயோஜனம்? அவர் முக்தியைக்கொடுப்பவர்.

ஆகையால் முக்தியைக் கொடுக்கிறார். அவர் மோக்ஷந்தருபவராகவிருக்கட்டும். பக்தி ஏன்? வேறுவிதத்தால் மோக்ஷமடையலாமே என்றால் அந்தமோக்ஷத்தைப்பெற பக்திதான் காரணம். வேறு மார்க்கமில்லை.

கடோபநிஷத்தில், "பிரவசனத்தினால் பகவானை அடைய முடியாது. சிறந்த புத்தியினாலும் அடைவது ஸாத்யமல்ல. அநேக வேதங்களை அத்யயனஞ் செய்வதினாலும் முடியாது. ஆனால் அந்த பகவானே எவனொருவனைத் தன் பக்தனாகக் கருதுகிறாரோ அவனுக்கே தன் தரிசனத்தைத் தந்தருளுகிறார்" என்று சொல்லப்பட்டபடி பக்தி அவசியம் செய்யப்படவேண்டும்.

சாந்தோக்ய உபநிஷத் பாஷ்யத்தில்,

विष्णौ भक्तिर्विशेषेण मोक्षावाप्तौ हि कारणम् ।

“பகவானிடம் எல்லாவற்றையும் விட உத்தமமாகச்செய்யும்பக்தியானது மோக்ஷத்திற்கு ஸாதனமானது” என்று கூறப்பட்டிருக்கிறது.

தானம், யாகம், தபஸ் முதலியவைகளால் பரமாத்மா திருப்தியடைகிறதில்லை. பக்தியினுல் தான் திருப்தியடைகிறார் என்று முன் கூறப்பட்டதல்லவா! ஆகையால் நாம் தானம் முதலியவைகளைச் செய்யவேண்டாம். பக்தி ஒன்று செய்தால் மட்டும்போதுமானது என்று கருதலாகாது. ஏனென்றால், பவிஷ்யத் பர்வத்தில்

दानतीर्थतपोयज्ञपूर्वाः सर्वेऽपि सर्वदा ।
अङ्गानि हरिसेवायां भक्तिस्त्वेका विमुक्तये ॥

“தானம் செய்தல், தீர்த்தயாத்திரை அல்லது ஸச்சாஸ்திரப்பிரவசனம், தபஸ் (அதாவது உண்மை பேசுதல் முதலிய வாசிகதபஸ்ஸும், மனதை துர்மார்க்கங்களில் பிரவேசிக்காவண்ணம் ஸன்மார்க்கத்தில் அடக்கிவைப்பதான மானஸிக தபஸ்ஸும், கோப்ராம்மண பூஜையெனும் காயிக தபஸ்ஸும்) யாகம் முதலிய வர்ணுசிரம தர்மங்களையும் எப்போதும் செய்ய வேண்டும். இவைகளெல்லாம் பகவத் ஸேவையின்கண் அங்கமாகும்.” என்ற படியும்,

भक्त्यर्थान्यखिलान्येव भक्तिर्मोक्षाय केवला ।

“மேற் சொன்ன எல்லாவர்ணுசிரம தர்மங்களும் பக்தியுண்டாவதற்கே செய்யப்பட வேண்டியவை” என்றபடியும் யாகாதி ஸத்காரியங்களைச் செய்யாவிடில் பக்தி நமக்குண்டாகாது. ஆகையால் நாம் அவைகளையும் கையாளவேண்டும்.

மேலும் தர்மவியாதன் என்ற வேடன், ஐந்து வயதுள்ள துருவன், மிருகமான கஜேந்திரன், சூத்திரனான விதுரன், பராக்ரமமற்றவனும் தன் பிள்ளையான கம்ஸனுல்சிறையிலடைக்கப்பட்டவனுமான உக்ரசேன ராஜா, மூன்று அவயவங்களில் கூனியான திரிவக்ரா

என்றவள் பரம ஏழையான குசேலர், இவர்கள் மோக்ஷமடைந்த காரணம் யாது ? தினந்தோறும் பக்ஷிகளையும், விலங்குகளையும், வதைத்துவந்ததால் அவ்வேடன் முக்தியடைந்தானா? வயது முதிர்ந்தால்தான் மோக்ஷமடையலாமா? அப்படியாயின் சிறிய பாலகனான துருவனுக்கு எத்தனை வயது ? படிப்பினால் பகவானைச் சந்தோஷிக்க முடியாது. முதலையின் வாயினின்று விடுவிக்கப்பட்ட கஜேந்திரனின் படிப்பு என்ன ? முக்தியைப் பெற ஜாதி காரணமாகாது. விதுரன் சூத்திரனாலும் பகவானின் பக்தனல்லவா! உக்ரஸேனனின் பராக்ரமத்தை மெச்சிக் கொண்டா அவனுக்கு மோக்ஷம் தந்தார் ? ஸ்ரீ கிருஷ்ணர் கம்ஸனை ஸம்ஹரிக்க மதுராபுரிக்குச் செல்லுங்கால் ராஜவீதியில் கம்ஸனுக்காகச் சந்தனத்தைக் கொண்டு செல்லும் திரிவக்ரை என்பவளிடம் அநுக்ரஹம் புரிந்தது அவள் அழகினால் மோகித்ததினாலா ? அளவற்ற செல்வம் பெற்றிருந்தால் மோக்ஷம் பெற முடியாது. அப்படியில்லையேல் குசேலரின் செல்வ நிலை யாது ? இந்த எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில்தான். பக்தியினால் பகவான் ப்ரீதியடைகிறார். அடியிற்கண்ட சுலோகத்தைக் காண்க.

व्याधस्याचरणं ध्रुवस्य च वयः विद्या गजेन्द्रस्य का
का जातिर्विदुरस्य यादवपतेरुग्रस्य किं पौरुषम् ।
कुब्जायाः कमनीयरूपमधिकं किं तत्सुधाम्नो धनं
भक्त्या तुष्यति केवलं न तु गुणैः भक्तिप्रियो माधवः ॥

பக்தியின் விதம்:— பக்தியின் ஸாதனங்கள் ஒன்பது விதமாகும். "கார்யம், காரணம் இரண்டிற்கும் அபேதம்" என்ற நியாயத்தினால் பக்தியின் ஸாதனம் ஒன்பது விதமாயினும் பக்தியே ஒன்பது விதமானது என்று கூறப்படுகிறது. அவை யாவன.

श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनम् ।
अर्चनं वन्दनं दास्यं सख्यमात्मनिवेदनम् ॥
इति पुंसार्पिता बुद्धिः भक्तिश्चेन्नवलक्षणा ।

1. சிரவணம்— பகவானுடைய சரித்திரங்களைக் கேட்பது. 2. கீர்த்தனம்—பகவானின் நாமங்களைக் கீர்த்தனஞ் செய்வது. 3. ஸ்மரணம்— தான்கேட்ட சரித்திரங்களை மனதில் மனனம் செய்வது. 4. பாதஸேவனம்—பகவானுக்குப் பணிவிடை செய்தல். 5. அர்ச்சனம்—துளசி முதலிய புஷ்பங்களினால் பகவானைப் பூஜித்தல். 6. வந்தனம்.

उरसा शिरसा दृष्ट्या मनसा वचसा तथा ।
पद्भ्यां कराभ्यां जानुभ்யां प्रणामोऽष्टाङ्ग ईरितः ॥

என்றபடி, மார்பு, தலை, கண், மனது, வாக்கு, கால்கள், கைகள், முழங்கால்கள் ஆகிய எட்டு அவயவங்கள் தரையில் படும்படி நமஸ்கரித்தல். (மனதினால் பகவானுடைய குணங்களைநினைத்துக்கொண்டிருப்பதும் வாக்கினால் அவைகளை உச்சரிப்பதுமே மனோவாக்கினால் நமஸ்காரம் என்பது.) 7. தாஸ்யம்—பகவானுடைய தாஸன் என்னும் பாவத்தையடைந்து அவருடைய சிசுருஷைகளில் கண்ணுங்கருத்துமாயிருப்பது. 8. ஸக்யம்—பகவானுடைய அன்பார்ந்த நேசனாக இருப்பது. 9. ஆத்மநிவேதனம்.—தன்னையும் தன்னைச்சார்ந்த ஐசுவரியம் முதலியவற்றையும் பகவானுக்கே அர்ப்பணம் செய்வது.

மேற்சொன்ன ஒன்பதுவித ஸாதனங்களில் ஏதோ ஒன்றையே கைக்கொண்டு ஸித்தியையடைந்த பக்தர்கள் உண்டு.

அப்பக்தர்கள் யாவர் எனெனின் அடியிற்கண்ட சுலோகத்தில் காண்க.

विष्णोश्च श्रवणे परीक्षिदभवद्वैयासकिः कीर्तने
प्रह्लादः स्मरणे तदंघ्रिभजने लक्ष्मीः पृथुः पूजने ।
अक्रूरस्त्वभिवन्दने च हनुमान दास्ये सखित्वेऽर्जुनः
सर्वस्यात्मनिवेदने च बलिभुक् कैवल्यमेषां फलम् ॥

சிரவணத்தால் மாத்திரம் பரீக்ஷீத் அரசன்
கீர்த்தனத்தால் „ சுகர்

| | | |
|---|---|---|
| ஸ்மரணத்தால் | மாத்திரம் | பிரஹ்லாதன் |
| பாதஸேவனத்தால் | ,, | லக்ஷ்மீ |
| அர்ச்சனத்தால் | ,, | பிருது ராஜன் |
| வந்தனத்தால் | ,, | அக்ரூரன் |
| தாஸ்யத்தால் | ,, | ஹநுமான் |
| ஸக்யத்தால் | ,, | அர்ஜுனன் |
| ஆத்மநிவேதனத்தால் | | பலிசக்கரவர்த்தி |

இப்படியிருக்க எல்லா ஸாதனங்களையும்மே கைக்கொண்டு விட்டால் அதன்பலனை நாம் சொல்லிமுடியாது. இக்கலியுகத்தில் மேற்சொன்ன ஒன்பது ஸாதனங்களில் இரண்டாவதான **கீர்த்தனம்,** தான் மிகவும் சிறந்ததாகும்.

**कृते यद्ध्यायतो विष्णुं त्रेतायां यजतो मखैः ।**
**द्वापरे परिचर्यादेः कलौ तद्धरिकीर्तनात् ॥**

“ கிருதயுகத்தில் பகவானை தியானம் செய்வதனால் உண்டாகும் பலனையும் திரேதாயுகத்தில் யாகங்களைச் செய்வதனாலுண்டாகும் பலனையும் துவாபரயுகத்தில் உயர் குலத்தோருக்குச் செய்யும் பணிவிடையாலுண்டாகும் பலனையும் கலியுகத்தில்பகவானுடைய நாமஸங்கிர்த்தனத்தாலேயே அடைகிறார்கள்.” ஆகையால் நாம் நன்னாளை வீணாளாகச் செய்யாமல் இந்த ஸதானத்தையாவது பூர்த்தியாகச் செய்து ஸித்தியடைய முயற்சிக்கவேண்டியதவசியம்.

பக்தியின் மஹிமை:—இதை நம்மால் சொல்லவியலாது. ஏனெனில்

**निश्शेषधर्मकर्ताप्यभक्तस्ते नरके हरे ।**
**सदा तिष्ठति भक्तश्चेद्ब्रह्महापि विमुच्यते ॥**

‘ஹே ஹரியே! எல்லா தர்மகாரியங்களையும் செய்தவன் ஒருவன் உம்மிடம் பக்தியைச் செய்யாவிடில் எப்போதும் நரகத்திலேயே

வசிக்கிறான். பிரஹ்மஹத்தியைச் செய்த ஒருவன் உம்மிடம் பக்தியைச் செய்வானேயாகில் முக்தியடைகிறான்."

धर्मो भवत्यधर्मोऽपि कृतो भक्तैस्तवाच्युत ।
पापं भवति धर्मोऽपि यो न भक्तैः कृतो हरे ॥

"ஒரு பக்தன் அதர்மத்தைச் செய்யின் அது தர்மமேயாகும். அபக்தன் தர்மத்தைச் செய்தாலும் அது அதர்மமாகும்."

இதனால் ஸகல சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட தர்மா தர்மங்களையே தலைகீழாக மாற்றும் சக்தி பக்திக்கு உண்டல்லவா!

அவ்வண்ணமே பக்தியினால் அளிக்கப்படும் ஒரு இலையோ புஷ்பமோ, பழமோ ஜலமோ அமுதத்திற்குச் சமமாகிறது. இதையே கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறியிருக்கிறார்

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतं अश्नामि प्रयतात्मनः ॥

" பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் வனவாஸம் செய்துவரும் ஓர் நாளில் துர்யோதனனால் ஏவப்பட்ட துர்வாசமகரிஷி ஆயிரக் கணக்கான சிடர்களுடன் வனத்திற்குச் சென்று அன்னத்தையா சித்தார். அப்போதுதான் போஜனமும் முடிவுபெற்று அக்ஷய பாத்திரமும் சுத்தம் செய்யப்பட்டுமிருந்தது. துரௌபதியோ உள்ளம் பதைத்து ஸ்ரீ கிருஷ்ணரை பக்தியுடன் ஸ்மரிக்கவே அவரும் அங்கு தோன்றி அந்த அக்ஷய பாத்திரத்தில் ஒட்டிக் கொண்டிருந்த ஓர் அகத்திக் கீரை இலையை ஆபோசனத்துடன் உட்கொள்ளவே பசியென்று ஓலமிட்ட துர்வாஸரும் அவருடைய சிடர்களும் வயிறாரப் புஜித்தவர்கள் போல் திருப்தியுடன் தம் ஆச்ரமம் சென்றனர். இந்தக் கதையால் துரௌபதியால் பக்தியுடன் அளிக்கப்பட்ட ஓர் இலையால் பகவான் எவ்வளவு ப்ரீதியடைந்திருக்கிறார் பாருங்கள்!

திரிகூடபர்வதத்தின் ஓர் தாழ்வரையிலுள்ள வருணபகவானின் ருதுமத் என்னும் உத்யானவனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த கஜேந்திரமானது முதலையினால் பிடித்திழுக்கப்பட்டபொழுது அது பக்தியுடன் அர்ப்பணம்செய்த ஓர் தாமரைப் புஷ்பத்தினாலேயே பிரீதியடைந்த பகவான் அதன் முன் தோன்றி முதலையினின்றும் விடுவிக்கவில்லையா ?

ராமாவதாரத்தில் சபரிதான் ஒவ்வொரு பழத்தையும் முதலில் தின்று மீதியையே பகவானுக்கு பக்தியுடன் அர்ப்பணம் செய்ததை பகவான் ஏற்றுக்கொண்டு அவளுக்கு முக்தியைக்கொடுத்தாரல்லவா !

பகவானை ஆராதிக்க நாம் சிரமப்பட்டுத் திரவியங்களைச் சேகரிக்க வேண்டியதில்லை. ஆறு முதலியவைகளில் ஓடிக்கொண்டிருக்கும் ஜலத்தையே பக்தியுடன் பகவானுக்கு ஸமர்ப்பித்தால் போதுமானது.

பொதுவாக பக்தர்களின் நடை உடை பாவனைகள் ஸ்ரீமத்பகவத் கீதையில் 12ஆம் அத்தியாயத்தில் 13 முதல் 20 சுலோகம் வரையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட குணங்களை நம்மிடம் விருத்திசெய்துகொண்டு பகவானுடைய ப்ரீதிக்குப்பாத்திரர்களாக வேண்டுமாறு அனைவரும் பிரார்த்திக்கப்படுகின்றனர்.

சுபம் !

M. ராமராவ்,
காரியதரிசி

மாத்வ ஸபா,
கும்பகோணம்.

# மதிப்புரை.

## தொழிலாசிரியன்.

சிவகங்கையிலிருந்து இதின் மானேஜரால் அனுப்பப்பட்ட இப்பெயர் வாய்ந்த ஓர் மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை வரப்பெற்றோம்.

இதில் தொழிலாளிகளுக்கு வேண்டிய பல விஷயங்களும் நம்தேசமுன்னேற்றத்திற்குவேண்டிய உபாயங்களும் வியவஸாயத்திற்கு வேண்டிய முறைகளும் ஸாமான்யமாய் சொல்பமாயிருக்கும் வியாதிகளுக்கு வைத்தியர்களை எதிர் பாராமல் நாமாகவே சிகித்ஸை செய்துகொள்வதற்கு வேண்டிய லகுவான ஔஷத முறைகளும் மனோவச்சியத்திற்கு வேண்டிய ஸாதனங்களும் மற்றும் பல சில்லரை விஷயங்களும் வெளியிடப் பட்டிருக்கின்றன. வேலையில்லாமல் ஜீவனத்துக்கு சிரமப்படுகிறவர்களுக்கு ஏதாகினும் ஒரு தொழிலில் முன்னேற்றமடைவதற்கு இது மிகவும் உபகாரமாயிருக்கும். ஆகையால் இக்காலத்திற்கு இவ்வித பத்திரிகைகள் வெளிவந்துலாவினால் லோகோபகாரம் ஏற்படும் என்று யாரும் கருதக் கூடியதே.

வருஷச்சந்தா உள் நாட்டுக்கு ரூ. 2—0—0
,, வெளிநாட்டுக்கு ரூ. 3—0—0

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்,

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

---

பட்டாரகருக்கு 39 அம்சம் தெற்கில்
பணுதரேசராலயம் 3

பணுதரேசருக்கு 5 அம்சம் வடக்கில்
பணீசராலயம் 4

பணீசருக்கு 24 அம்சம் தெற்கில் † கச்சபேசராலயம் 5

வரலாறு

'மஹாகாளேசர்' முருகக்கடவுள் தனக்குப் பிள்ளையாக வர வேண்டுமென்று ஆதிசேஷனல் பூஜிக்கப்பட்டவர்; 'பட்டாரகேச்வரர்' ஜாகதாத்மா என்பவருக்குக் கவித்துவத்தைத் தந்தவர்; 'பணுதரேசர்' பூர்வத்தில் ஒரு பிரளயகாலத்தில் பனிரண்டுசூரியர்களால் நீலவர்ணத்தையடைந்த படங்களையுடைய சர்ப்பங்களுக்கு முக்தியைக் கொடுத்தவர்; 'பணீசர்' கத்துரு புத்திரர்களான சர்ப்பராஜாக்களைக் கருட பயத்தினின்றும் காத்தவர்; 'கச்சபேசர்' பிரமன், கச்சபமாய் (ஆமையாய்) வந்த திருமால், சரஸ்வதி, சூரியன், சாஸ்தா, சண்டிகை; சுப்பிரமண்ணியர், சனற்குமாரர் என்பவர்களால் பூஜிக்கப்பட்டவர்.

தீர்த்தம் 4

காமாக்ஷிதேவி ஆலயத்துக்குள் ஷடி தேவிக்கு 1 அம்சம் மேற்கு
திக்கில் பஞ்சதீர்த்தம் 1

பஞ்சதீர்த்தத்துக்கு 24 அம்சம் தெற்குதிக்கில்
காயாரோகணதீர்த்தம் 2

காயாரோகணதீர்த்தத்திற்கு 21 அம்சம் வடக்குதிக்கில்
‖ இஷ்டசித்தி தீர்த்தம் 3

இஷ்டசித்தி தீர்த்தத்துக்கு 15 அம்சம் வடக்குத்திக்கில்
¶ சக்கரதீர்த்தம் 4

வரலாறு.

'பஞ்சதீர்த்தம்' சதாசிவமூர்த்தியினது பஞ்சமுகத்தினின்றும் தோன்றியது; சிவபூதங்களிரண்டுக்கு முக்தியையும், பிருதிவி முதலிய பஞ்சபூதங்களுக்கு வேண்டிய சித்திகளையும் கொடுத்தது; 'காயாரோகணதீர்த்தம்' யயாதிமகாராஜனைச் சரீரத்தோடு சுவர்க்க

---

¶ சுவாயம்புவாயுள்ள இலிங்க மூர்த்தி
‖ இது கச்சபேசராலயத்திலுள்ளது
† பொன்னேரியம்மை கோயிலுக்கு எதிரிலுள்ளது

லோகம் போகச் செய்தது, 'இஷ்டசித்திதீர்த்தம்' சனற்குமார முனிவருக்குச் சாபத்தால் வந்த ஒட்டக சரீரத்தைப் போக்கியது; 'சக்கர தீர்த்தம்' கார்த்தவீரியனுக்குச் சாபசரீரத்தைப் போக்கி நிஜரூபம் கொடுத்தது.

## தீர்த்தபலன்.

'பஞ்சதீர்த்தத்தில் சுக்கிரவாரத்தில் ஸ்நானம் செய்வோருக்குக் கோதாவரியில் ஸ்நானம்செய்த பலனுண்டாகும்' என்று சதாசிவமூர்த்தியும்; 'காயாரோகண தீர்த்தத்தில் குருவாரத்தில் ஸ்நானம் செய்வோருக்குசிந்து நதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும்' என்று தௌம்ய முனிவரும்; 'இஷ்டசித்தி தீர்த்தத்தில் ஆதிவாரத்தில் ஸ்நானம் செய்வோருக்கு நர்மதையில் ஸ்நானம்செய்த பலனுண்டாகும் என்று சனற்குமார முனிவரும், 'சக்கர தீர்த்தத்தில் தேவி ஜன்ம நக்ஷத்திரத்திலும், பூர்வ பல்குனியிலும் ஸ்நானம் செய்வோருக்குக் கண்டகியில் ஸ்நானம்செய்த பலனுண்டாகும், என்று கார்த்தவீரியனும் வரங்கொடுத்தனர்.

ஆக, காமகோட்டமாகிய இவ்வெல்லையில் சங்குபாணி விநாயகாலயம் 1 குமாரகோட்டப் பெருமானாகிய முருகக்கடவுளாலயம் 1; துர்க்காலயம் 6; விஷ்ணுவாலயம்4;சிவாலயம்5;தீர்த்தம்4.

கச்சபேச்வராலயத்திற்கு 5 அம்சம் ஈசானத்திலுள்ள ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள் அன்னபூரணிமுதல் சந்தானஸ்தம்பம்வரையில் சொல்லப்பட்டவை யெல்லாம் இருக்கும் இடங்கள் இனிவருமாறு.

காமாக்ஷிதேவி வீற்றிருக்கும் இடத்துக்கு நிருதியில்
அன்னபூரணி ஆலயம்.
அன்னபூரணி ஆலயத்துக்கு வாயுவில் சாஸ்தா ஆலயம்,
சாஸ்தாவாலயத்துக்கு ஈசானத்தில் அஞ்சன காமாக்ஷி
அஞ்சன காமாக்ஷிக்குச் சமீபம்கிழக்கில் சந்தானஸ்தம்பம்

## வரலாறு.

'அன்னபூரணி, பூர்வத்தில் காசிக்ஷேத்திரத்தில் உண்டாகிய துவாதச வருஷக்ஷாமத்தை அன்னதானத்தால் போக்கினவள். இவ்வம்பிகையை அன்னவிர்த்தியை வேண்டினோர், அவரது ஆலயத்தில் தர்மத்துவாரம் என்று பெயர் பெற்றுள்ள முன்னேகாண

ப்படும் சிறிய துவாரத்தை விட்டு அவரது வலப்பக்கத்திலுள்ள சிறியதுவாரத்தையடைந்து அந்தவிடத்தில் தமதுகைகளைவிரித்து மூன்று சாண் அளந்து மூன்று தடவையும் 'பவதிபிக்ஷாந்தேஹி' என்று பிரார்த்தித்து வேண்டுவாராயின், அவர் பசித்திருந்துவாழும் தாழ்வற்று பசித்துண்டுவாழும் பெருவாழ்வை வேண்டியவாறு பெறுவர். 'சாஸ்தா' சுப்பிரமணியக்கடவுளைப்போல் தேவியினுடைய திருமுலைப்பாலை அவ்விடத்திலுண்ணப்பெற்றனர். 'அஞ்சனகாமாக்ஷி' விஷ்ணுமூர்த்தியினுடைய சாபத்தால் வந்தவிருத்த ரூபத்தைக்காமாக்ஷிதேவியினுடைய கடாக்ஷத்தால்நீங்கப்பெற்று அம்மையைப்போல் சர்வானுக்கிரஹ மூர்த்தியாய்ச் சாந்தகாமாக்ஷி என்று வாழ்கின்றனள். 'சந்தானஸ்தம்பம்' ஸ்ரீ காமாக்ஷி தேவி அனுக்கிரகத்தால் வைவஸ்வதமநு மூன்று பிரதக்ஷணம் செய்து புத்திரனைப்பெறும் வரம்பெற்று அயோத்தியை யடைந்தனன்.

காமகோட்டமாகிய சக்திசாலையில்இவையெல்லாம் காமாக்ஷி தேவியினுடைய ஆக்ஞையினால் எப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போர்க்குக் கைவல்யமாகிய முக்தி நகரவாச பலனுண்டாகும். ஆதலால் இது பூலோக ஸ்ரீபுரம் எனப் பெயர்பெற்றது.

மஹிமை.

கங்காதீரத்தில் குண்டிவினி நகரத்தில் ஸ்ரீவத்ஸகோத்திரனும் ருக்வேதியுமான ஜகந்நாதனென்னும் ஓர் பிராமணன் வேதகிருத்தியங்களை யொழித்துத் துஷ்கிருத்தியங்களைக்கைக்கொண்டு பசு, அஜம், மச்சம் இவைகளைக் கொன்று வியாபாரம் நடத்தி அவைகளைத் தானும் தின்று வாழ்ந்து வருங்காலத்தில், யாத்திரார்த்தமாய்க் காஞ்சியிலிருந்து வந்த பிராமணனுக்குச் சிறிது பொருள் தந்தனன்.

அந்தக் காஞ்சிப் பிராமணன் அச்சிறிது பொருளைக்கொண்டு தனக்கு வேண்டிய ஆகாராதிகளைச் செய்துகொண்டு காசியையடைந்தனன். பின்னர் ஜகந்நாதன் விஷக்கடியாலிறக்க அவனை யமதூதர்கள் மிக்க கோபத்தோடு பாசத்தாற்கட்டி அக்கினிமயமாகிய தண்டங்களால் மோதி மண்டையைப் பிளந்து அக்கினி

ஜுவாலை வீசும் மார்க்கமாய் இயமனிடம் அதிவேகமாய்க் கொண்டு செல்லும்பொழுது தேவியாக்ஞையால் அவருடைய கணங்கள் அத் தூதர்களைக் கொன்று விமானத்திலேற்றித் தேவிசமீபத்திற் சேர்த்தனர். இயமன் இவைகளைக்கேட்டு அம்பிகையினிடத்திற் சென்று வணங்கி நாகவேதனையை அனுபவிக்கவேண்டிய இம்மஹாபாவியை அடியேன் வசம் ஒப்புவித்தல் முறைமை என்று பிரார்த்தித்தனன். அது கேட்டதேவி என் க்ஷேத்திரத்திலிருந்து யாத்திரையாகப் போன ஒரு பிராமணனுக்குச் சிறிது பொருளுதவினர். அது எனக்குப் பிரீதியாயிற்று. அதனால் சகல பாபங்களினின்றும் நீங்கினன். இனி இவ்வந்தணனை உன்வசம் ஒப்புவித்தல் அடாது என்று கூற இயமன் யான்கேட்ட பிழையைப் பொறுக்க வேண்டும் என்று பல முறையும் வணங்கித் தனது உலகம் போய்ச் சேர்ந்தனன்.

பத்தாவது அத்தியாயம் காமகோட்டப் பிரபாவம் முற்றிற்று.

---

உ

ஸ்ரீகாமாக்ஷி தேவ்யை நம:

## பதினொன்றும் அத்தியாயம்.

### விஷயசூசனை.

[இது ஸ்ரீ காமாக்ஷி தேவியினுடைய ஆலயத்துள் பராசக்தி வீற்றிருக்கும் மண்டபம் காயத்திரிமண்டபம் என்பதையும், அதற்கு ஆதாரமாயுள்ளது மஹாபிலம் என்பதையும் அந்த மஹாபிலத்துக்குரிய மஹிமையினால் வந்த நாம விவரணம் இவை என்பதையும், அவற்றுள் காமகோடி, காம கோஷ்டம், என்னும் இரண்டு நாமங்களுக்குள்ள விசேஷணங்கள் இவை என்பதையும், பின்னர் பந்தகாசுரனுடைய உபத்திரவம் இத்தன்மைத்தென்பதையும் அவ்வசுரனுடைய உபத்திரவத்துக்கு அஞ்சி அங்குவந்த தேவர்களுக்கு அந்த மஹாபிலத்தினுடைய பிரபாவம் விளக்கப்பட்ட விதம் இத்தன்மை என்பதையும், அந்தப்பில பிரதட்சண மஹிமை இத்தன்மை என்பதையும் விளக்குவது.]

### பிலாகாசப் பிரபாவம்

பிலாகாசமானது இஷ்டசித்தி தீர்த்தத்திற்கு மூன்று அம்சம் ஈசானத்தில் ஸ்ரீ காமாக்ஷிதேவி வீற்றிருக்கும் ஆலயத்திலுள்ளது.